**தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள், சென்னை – 06**

ப.மு. எண். 007069 /அ4/இ1/2025, நாள்.05.02.2025

*****

பொருள் : தமிழ்நாடு அமைச்சுப்பணி – பணிவரன்முறை – சென்னை 6, பள்ளிக்கல்வி இயக்ககத்தில் இளநிலை உதவியாளர் பதவியில் பணிபுரியும் திரு.க.நந்தகுமார் என்பார்க்கு பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – சார்ந்து

பார்வை :

1. சென்னை–03, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக்குழு செயலாளரின் கடிதம் எண் 1975/PSD–C2/2023, நாள். 25.08.2023.
2. தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண். 56703/அ4/இ1/2023, நாள்.27.09.2023.
3. சென்னை–06, அரசுத் தேர்வுகள் இயக்ககம், இணை இயக்குநரின் (மேல்நிலை) கடிதம் ந.க.எண்.206227/வி1/2024, நாள்.28.03.2024
4. சென்னை–06, அரசுத் தேர்வுகள் இயக்ககம், இணை இயக்குநரின் (பணியாளர்) கடிதம் ந.க.எண்.234459/வி1/2023, நாள்.12.02.2024
5. தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண். 067182/அ2/இ3/2024, நாள்.02.12.2024.

*****

சென்னை–6, பள்ளிக்கல்வி இயக்ககத்தில் பணிபுரியும் திரு.க.நந்தகுமார் என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கக் கோரிப் பார்வை (5)ல் குறிப்பிட்டுள்ளவாறு கருத்துருக்கள் பெறப்பட்டு கீழ்காணும் விவரங்கள் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி பணியாளர் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 24.07.2022 அன்று நடைப்பெற்ற தொகுதி–IV தேர்வு மூலம் இளநிலை உதவியாளர் பணிக்குத் தேர்வு செய்யப்பட்டு பார்வை (1)இல் காணும் கடிதம் மூலம் பள்ளிக் கல்வித் துறை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது, பார்வை (2)இல் காணும் செயல்முறைகள் வாயிலாக சென்னை–6, பள்ளிக் கல்வி இயக்ககத்தில் இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமனம் வழங்கப்பட்டு, 29.09.2023 முற்பகல் முதல் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார். பார்வை (3) மற்றும் பார்வை (4) இல் காணும் செயல்முறைகளின்படி மேல்நிலை மற்றும் இடைநிலை மதிப்பெண் சான்றுகளின் உண்மைத் தன்மை சான்றளிக்கப்பட்டு, கருத்துருக்களுடன் இணைக்கப்பட்டுள்ளன.

இவ்வுண்மைத்தன்மை அறிக்கையின் அடிப்படையிலும், கீழ்க்காணும் நிபந்தனைகளின் அடிப்படையிலும் கீழ்க்காணும் பணியாளருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் நிபந்தனைகள் சட்டம் 2016, பிரிவு 28இன் கீழ் பணியில் சேர்ந்த நாளான கீழ்குறிப்பிட்ட நாட்களில் பணிவரன்முறை செய்து கீழ்க்காணுமாறு ஆணை வழங்கப்படுகிறது.

| வரிசை எண். | பெயர் மற்றும் பதவி திரு/திருமதி | நியமன முறை | கல்வித் தகுதி | இளநிலை உதவியாளர் பதவியில் நியமன நாள் | இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|---|
| 1. | க.நந்தகுமார் | தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் | SSLC | 29.09.2023 முற்பகல் | 29.09.2023 முற்பகல் |

1. இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து தொடர் மூன்றாண்டு பணிக்காலத்திற்குள் இரண்டாண்டுகள் பூர்த்தி செய்த பின்னரே இளநிலை உதவியாளர் பதவியில் தகுதிகாண் பருவம் முடித்து ஆணை வழங்கப்படும்.

2. தகுதிகாண் பருவ காலத்தில் இரண்டாண்டுக்குள் மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்வு மற்றும் பவானி சாகர் அடிப்படை பயிற்சியில் தேர்ச்சி பெற வேண்டும்.

3. உயர்நிலைப் பள்ளிப் படிப்பில் தமிழை மொழிப்பாடமாகவோ அல்லது கற்பிப்பு மொழியாகவோ பயிலாமல் இருப்பின், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழுமத்தால் நடத்தப்படும் தமிழ் இரண்டாம் நிலைத் தேர்வில் பணிவரன்முறை செய்த நாளிலிருந்து இரண்டாண்டிற்குள் தேர்ச்சி பெற வேண்டும்.

4. இளநிலை உதவியாளர் பதவியில் தகுதிகாண் பருவம் முடிக்கப்பட்ட பின்னரே இரண்டாவது மற்றும் தொடர் ஊதிய உயர்வுகள் வழங்க இயலும்.

இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி).

பெறுநர்

சார்ந்த பணியாளர் (உரிய அலுவலர் மூலமாக).

நகல் : கண்காணிப்பாளர் அ2 பிரிவு,
பள்ளிக் கல்வி இயக்ககம், சென்னை-06